# அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA)

## தேர்வு - 1

பத்தாம் வகுப்பு | தமிழ் - முதல் தாள் [காலம் : 2-30 மணி

(மொத்த மதிப்பெண்கள் : 100)

(செய்யுள், உரைநடை)

குறிப்பு : i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

ii) வினா எண் 49க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்

பிரிவு-I (மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

I உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 6×1=6

1. 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்து' எனப் பாடியவர்
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா
2. கம்பரைப் புரந்தவர் ------.
   அ) ஔவையார் ஆ) புகழேந்தி இ) சடையப்ப வள்ளல்
3. கேழல் என்பதன் பொருள் ------.
   அ) எருமை ஆ) புலி இ) பன்றி
4. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ----- இல்லாமை
   அ) வாக்குரிமை ஆ) பேச்சுரிமை இ) சொத்துரிமை
5. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது -----.
   அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா இ) பத்ம விபூஷன்
6. தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவர் -----.
   அ) பேரறிஞர் அண்ணா ஆ) மு. வரதராசனார் இ) திரு.வி.க.

பகுதி - 2

II கோடிட்ட இடத்தை நிரப்புக : 6×1=6

7. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர் -------.
8. அரி என்ற சொல்லின் பொருள் -----.
9. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் --------.

திருப்புக



www.Kanchikalvi.com

10. தமிழ் மிகவும் பண்பட்ட மொழியென கூறிய மொழியியல் அறிஞர் -------.

11. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ----- இருக்கும்.

12. இராமலிங்கர் சத்திய தருமச் சாலையை நிறுவிய இடம் ------.

பகுதி-3

III பொருத்துக : 4 x 1=4

| | | |
|---|---|---|
| 13. விரை | - | பனையோலைப் பெட்டி |
| 14. இறை | - | அழகு |
| 15. வட்டி | - | மணம் |
| 16. சந்தம் | - | தலைவன் |

பகுதி-4

IV விடைக்கேற்ற வினா அமைக்க : 4 x 1=4

17. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி-ஒலிப்படக் கருவி பயன்படுகிறது

18. தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்

19. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்

20. பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார் பெரியார்.

பிரிவு-II (மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

V கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 5 x 2=10

21. கூகையையும், காக்கையையும் காட்டி வள்ளுவர் விளக்குவது யாது ?

22. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாக கணிமேதாவியர் குறிப்பிடுவன யாவை ?

23. 'அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம்' - யார், யாரிடம் கூறியது ?

24. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர் ?

25. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?

26. தேவாரம் - பொருள் எழுதுக.

27. நந்திவர்மன் பெருமைகளாக நந்திக் கலம்பகம் கூறுவன யாவை ?

பகுதி - 2

VI எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 5 x 2 =10

28. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது ?

29. மொழிமாற்றம் என்றால் என்ன ?

30. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை ?

31. ஞாலம் - பெயர்க்காரணம் கூறுக.

www.Kanchikalvi.com

32. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது ?

33. இராமலிங்கர் எங்கு, எப்போது பிறந்தார் ?

34. தற்போது வளர்ந்துவரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை ?

பிரிவு-III (மதிப்பெண்கள் : 24)

பகுதி - 1

VII கீழ்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3 x 4 =12

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழ மன்னர்களின் சிறப்புகள் யாவை ?

36. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை ?

37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

38. சீறாப் புராணம் - குறிப்பு வரைக.

39. சாதனைப்பூக்கள் என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார் ?

பகுதி - 2

VIII கீழ்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3 x 4 =12

40. மணக்கொடை குறித்து பெரியார் கூறுவன யாவை ?

41. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

42. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை ?

43. மனித நேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

44. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.

பிரிவு-IV (மதிப்பெண்கள் : 10)

IX 45. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5 x 1=5

நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
இவையிவை யுடை நந்தி
மதியினி அரசர்முன் மலரடி பணிகிலர்
வானகம் ஆள்வாரே

வினாக்கள் :

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?

2. இப்பாடல் பகுதியின் ஆசிரியர் யார் ?

3. இவையிவை - இலக்கணக் குறிப்பு எழுதுக.

4. வானகம் - பொருள் கூறுக.

5. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களை எழுதுக.

www.Kanchikalvi.com

www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com

46. கீழ்க்காணும் உரைநடையைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5×1=5

பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது திருக்குறள். தமிழர் உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலைப் பெரிதும் போற்றினர். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் அன்றைய பழமொழி இன்றும் தமிழரால் போற்றப்படுகிறது.

உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருத நிலமும் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டு இருந்தது. மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப் படுத்தினர் தமிழர்.

வினாக்கள் :

1. தமிழகத்தில் யார் உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர் ?
2. உழவரின் சிறப்பை திருக்குறள் எவ்வாறு கூறுகிறது ?
3. உழவுத் தொழிலை போற்றும் பழமொழி யாது ?
4. மருத நிலம் என்பது யாது ?
5. இப்பகுதிக்கான பொருத்தமான தலைப்பை எழுதுக.

## பிரிவு-V (மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

X கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க: 2×8 =16

47. ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்தினை தொகுத்து எழுதுக.

(அல்லது)

புலி வசனித்த படலத்தின் கருத்தினை தொகுத்து எழுதுக.

48. அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார் ?

(அல்லது)

தொழிற்கல்வி - தொழில்நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக.

### பகுதி - 2

49. செய்யுள் வடிவில் விடை தருக : 2+2+3+3=10

அ) பகல் வெல்லும் எனத் தொடங்கும் குறள்.

ஆ) கெடும் என முடியும் குறள்.

இ) விடுநனி எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்

ஈ) இன்றிள்ளைப் - எனத் தொடங்கும் நிற்க நேரமில்லை பாடல்

www.Kanchikalvi.com www.TnpscExamOnlineResult.blogspot.in
www.Kanchikalvi.com